6. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதைத் தளர்த்த வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

7. கவன ஈர்ப்பு.

(அ) திண்டுக்கல் ஜி. டி. என். கலைக்கல்லூரியில் உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த மாணவர் மீது தடியடி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்ற பிப்ரவரித் திங்கள், 11-ம் தேதி திண்டுக்கல் ஜி.டி.என். கலைக்கல்லூரியில் உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த மாணவர்கள் மீது காவல்துறையினர் தடி யடி நடத்தியுள்ள அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 11—2—1969 அன்று வேலை நிறுத்தம் செய்த திண்டுக்கல் ஜி.டி.என். கலைக் கல்லூரி மாண வர்கள் சுமார் 400 பேர் கல்லூரிக்குள் கூட்டங்கூடி, அதற்கடுத்த வாரம் நடைபெறவிருந்த மாதிரித் தேர்வு நடைபெறக் கூடாதென கோரிக்கை விடுத்தனர். அவர்கள் வன்செயலில் ஈடுபடத் தொடங்கி பிற்பகல் 2-30 மணி அளவில் கற்களை வீசியெறியத் தொடங்கியதாக காவலர்களின் உதவியை நாடி கல்லூரி முதல்வர் எழுதிய வேண்டுகோள் அனுப்பினார். திண்டுக்கல் காவல் துறை உதவிக் கண்காணிப்பாளரும், காவலர் சிலரும் கல்லூரிக்கு விரைந்து வந்து, சிறு அளவில் தடியடி செய்து அமைதியை நிலைநாட்டினர். 11 மாணவர்களும் 3 காவலர்களும் காயமுற்றனர். இவர்கள் புறத்துள்ள பிணியாளர்களாக சிகிச்சை அளிக்கப்பட்டனர். மாணவர்கள் கற்களை வீசியெறிந்ததால், கல்லூரிக் கட்டடங்களிலும் விடுதிக் கட்டடங்களிலும் இருந்த குழல் விளக்குகள், கண்ணாடி சாளரங்கள் ஏனைய பொருள்கள் இவை நாசமுற்றன. கல்லூரி உடைமைக்கு 4,000 ரூபாய் அளவிற்குச் சேதம் ஏற்பட்டது.

இந்நிகழ்ச்சிக் குறித்து எ. எஸ். இளங்கோ மீதும் ஏனைய 18 மாண வர்கள் மீதும் இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் 147, 148, 149, 427, 332-வது பிரிவுகளின் கீழ் திண்டுக்கல் வட்டக் காவல் நிலையத்தில் 101/69 எண் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர்களில் 16 பேர் அந்த இடத்திலேயே கைது செய்யப்பட்டனர். எஞ்சிய மூவர், பிறகு கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மாணவர்கள், பின்னர் திண்டுக்கல் உட்கோட்ட குற்றவிசாரணை நீதிபதியால் பிணையத்தில் விடுவிக் கப்பட்டனர். இந்த நிகழ்ச்சி நடந்த பின்னர், கல்லூரி அதிகாரிகள் எப் பொழுது கல்லூரி பிறகு திறக்கப்படும் என்று தேதி குறிப்பிடாமல், கல்லூரி மூடப்பட்டதாக அறிவித்தனர். கல்லூரி 10—3—1969 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. இப்பொழுது அமைதி நிலவி வருகிறது.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : மதியம் ஒரு மணிவரையில் அமைதி யாக உண்ணாநோன்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், அதற்குப் பின் னால் அஸிஸ்டெண்ட் சூப்பரின்டெண்டெண்ட் ஆஃப் போலீஸ் தடியடி துவங்கிய பின்னர்தான் மாணவர்கள் பக்கத்திலிருந்து விரும்பத்தகாத எதிர் நடவடிக்கைகள் ஏற்பட்டது என்றும் எனக்குத் தகவல் வந்தி